# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## MCOP.No. 186/2022

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. பிரிடா ராஜபுஷ்பம் **Pw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 5th day of August 2026.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் 2ம் மனுதாரர் ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 10 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) சுரண்டை காவல் நிலையத்தில் குற்ற எண். 347/2021 சட்டப்பிரிவு 279, 304 ஏ இ.த.ச ன் கீழ் பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல் **ம.சா.ஆ. 1** ஆகும். 2) லேட்.சாலமோன் சேவியர் ராஜ்—ன் பிரேத பரிசோதனை அறிக்கையின் நகல்

**ம.சா.ஆ.2** ஆகும். 3) TN-76-D-5393 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல் **ம.சா.ஆ. 3** ஆகும். 4) TN-76-D-1167 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல் **ம.சா.ஆ. 4** ஆகும். 5) TN-76-D-5393 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் ஆர்.சி.புத்தகத்தின் நகல் **ம.சா.ஆ. 5** ஆகும். 6) TN-76-D-1167 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் ஆர்.சி.புத்தகத்தின் நகல் **ம.சா.ஆ. 6** ஆகும். 7) TN-76-D-1167 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் இன்சூரன்ஸ் நகல் **ம.சா.ஆ.7** ஆகும். 8) 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமத்தின் நகல் **ம.சா.ஆ. 8** ஆகும். 9) லேட்.சாலமோன் சேவியர் ராஜ்-ன் ஓட்டுநர் உரிமத்தின் நகல் **ம.சா.ஆ 9** ஆகும். 10) மனுதாரர்களின் ஆதார் அட்டைகள் மற்றும் வங்கி கணக்கு புத்தகங்களின் நகல்கள் **ம.சா.ஆ. 10 வரிசை** ஆகும். மனுப்படி உத்தரவாக கேட்டுக்கொள்கிறேன்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்தில் இறந்துபோனவர் எனது சகோதரர் என்றால் சரிதான். 1ம் மனுதாரர் சண்முகக்கனி எனது தாயார். 3ம் மனுதாரர் எனது சகோதரி. எனக்கும் எனது சகோதரி சாந்தா ராஜகுமாரிக்கும் திருமணமாகி நாங்கள் வேறு இடங்களில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். விபத்திற்கு முன்னர் எனது சகோதரர் ஏ.சி. மெக்கானிக்காக பணிபுரிந்து மாதம் ரூ.25,000/- வருமானம் ஈட்டிவந்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது, அது குறித்து நான் கேள்விப்பட்டேன் என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக வேன் ஓட்டுநரின் மீதுதான் புகார் கொடுக்கப்பட்டு, குற்ற வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் அந்த வேனிற்கு காப்பீடு இல்லாத காரணத்தினால் எனது சகோதரர் ஓட்டி சென்ற வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தை 3ம் எதிர்மனுதாரராக தேவையின்றி கட்சி சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்தவரை எனது சகோதரரோ, நாங்களோ 3ம் தரப்பினர் கிடையாது என்றால் சரியல்ல.

3ம் எதிர்மனுதாரரிடம் இழப்பீடு கோரி மனு எதுவும் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. விபத்திற்கு வேன் டிரைவர்தான் காரணம் என்பதால் 1, 2 எதிர்மனுதாரர்கள்தான் எங்களுக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்றும், 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi